<u>**In the Court of the District Munsif, Eraniel**</u>

**Original Suit No. 84/2016** **Date:24.04.2026.**

**(DW1)- செல்வகுமார்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஹார்ட்வேர் கடை வைத்துள்ளேன். தாவா சர்வே எண் சொத்தில் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமி விற்பனை செய்தது போக 35.100 செண்ட் கைவசம் வைத்திருந்தனர் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து முக்காடு- படுவூர் செல்லும் சாலைக்கு தெற்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி பி.வா.சா-ஆ. 7 ஆவணம் மூலம் வடக்கே 19.600 செண்ட் மற்றும் தெற்கே 9 செண்ட் சொத்தை ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமி கிரயம் பெற்றார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் மேற்படி 2 ஆம்பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தின் அளவுகளோடு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் 2 ஆம் பிரதிவாதி கிரயம் பெற்றது போக மீதம் 6.500 செண்ட் ஸ்தலத்தில் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் தாவா சர்வே எண்ணில் 35.100 செண்ட் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள வரைபடத்தில் நடுகண்டத்தின் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அளவுகள் படி நடுகண்டம் 6.500 செண்ட் அளவு உள்ளது என்றால் இருக்காலம். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கு சர்வே எண் சொத்தில் 3 செண்டிற்கான பத்திரம் என்று தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மேற்படி ஆவணத்தில் சொத்து விபரத்தில் ஒரு ஏக்கர் 3 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஆனால் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் ஒரு ஏக்கர் 28 செண்ட் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற ஆவணமான பி.வா.சா.ஆ.3 க்கான முன் ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. இரண்டு ஆவணங்களில் உள்ள சொத்து விபரங்களும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 3 ஆவணத்தில் முன் ஆவணமான பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நேசமணிக்கு கிரயம் கொடுத்ததாக துலங்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் நேசமணிக்கு கிரயம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள விபரம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு சர்வே எண் சொத்தில் 51.5 செண்ட் நிலம் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமியின் தந்தையார் ராஜையாவிற்கு பாதியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**